# "தர்மம் சர,,

நவம்பர் (15 .12.2025) • கும்பகோணம் • பிரதி-16


ஆனந்தத் தாண்டவம்

## ப்ரஹ்மஸ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்



மார்கழி மாதம் முழுவதும் பக்திப் பரவசத்தில் ஆழ்ந்திருக்கும் வேளையில் வானில் வரும் திருவாதிரை நட்சத்திரம் . அதுதான் ஆருத்ரா தரிசனம். இது வெறும் ஒரு விழா அல்ல; இது இறைவனின் எல்லையற்ற கருணையையும், அண்ட சராசரம் இயங்கும் தத்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு அற்புதமான நிகழ்வு.

**ஆசையும் தவமும்: பதஞ்சலி மற்றும் வியாக்கிரபாதர்**

முன்பொரு காலத்தில், பதஞ்சலி என்ற பெரும் முனிவர் ஒருவர் இருந்தார். இவர் யோகத்தின் தந்தை என்று போற்றப்படுபவர். அதே காலகட்டத்தில், வியாக்கிரபாதர் என்ற மற்றொரு முனிவர் கடும் தவத்தில் ஈடுபட்டிருந்தார் வியாக்கிரபாதர். காலையில் மலரும் பூக்களைக் கொண்டு சிவபெருமானை அர்ச்சிக்கும்போது, தேனீக்கள் பூக்களை நாடி வருவதற்கு முன், அவற்றைத் தொடும் முன் தான் பறிக்க வேண்டும் என்பதற்காக, புலியின் கால்களை வரமாகப் பெற்றார் இவர்கள் இருவருக்கும் ஒரே ஒரு ஆசைதான்: ஆனந்தத் தாண்டவத்தை தங்கள் கண்களால் காண வேண்டும். பதஞ்சலி முனிவர், "ஈரேழு உலகமும் இயங்கக் காரணமான அந்த நடனத்தைக் காணும் பேறு கிடைத்தால், பிறவிப் பயனை அடைந்ததாக உணர்வேன்" என்று தவம் செய்தார்.

**திருநடனத்தின் ரகசியம்: தில்லையில் அரங்கேற்றம்**

அவர்களின் தவத்தைக் கண்டு மனம் கனிந்த கருணைக்கடவுளான சிவபெருமான், முனிவர்கள்இருவருக்கும் ஒருநாள் காட்சியளிக்கத் திருவுளம் கொண்டார். மார்கழி மாதம், திருவாதிரை நட்சத்திரம் கூடிய தினம்! சிவபெருமான், தில்லையில் (சிதம்பரம்) உள்ள தமது சபைக்கு எழுந்தருளினார். அங்கே, தனது வலது காலைத் தூக்கி, அற்புதத்தின் உச்சமாக, ஆனந்தத் தாண்டவத்தை ஆடத் தொடங்கினார்!

**ஆருத்ரா தரிசனத்தின் சிறப்பு**

அன்றைய தினம்தான், சிவபெருமான் தனது ஆனந்த நடனத்தை எல்லோருக்கும் தரிசனம் கொடுத்து அருளிய நாள் ஆகும். எனவே, இந்தத் திருவாதிரை நட்சத்திர தினமே ஆருத்ரா தரிசனமாக கொண்டாடப்படுகிறது. இந்த தரிசனம் நமக்கு உணர்த்தும் தத்துவம் இதுதான்: நாம் செய்யும் சிறு தவமானாலும், உண்மையான பக்தியுடனும், இடைவிடாத முயற்சியுடனும் செய்தால் இறுதியில் இறைவனின் அருள் (தரிசனம்) நிச்சயம் கிடைக்கும்.

**"சம்ஸ்காரத்தைப் பற்றி அடுத்த இதழில் தொடரும்"** .

## ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்



# புண்ணியங்களின் வாசல் திறக்கும் மாதம்

### 1. தேவர்களின் அதிகாலைப் பொழுது

மார்கழி மாதத்தின் மிக முக்கியமான சிறப்பு என்னவென்றால், இது தேவர்களுக்குரிய அதிகாலைப் பொழுது (பிரம்ம முகூர்த்தம்) எனக் கருதப்படுவதாகும். நம்முடைய ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். அதன்படி, தை மாதம் முதல் ஆனி மாதம் வரை அவர்களுக்குப் பகல் என்றும்,

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை அவர்களுக்கு இரவு என்றும் கணக்கிடப்படுகிறது. இதில் மார்கழி மாதத்தின் இறுதிப் பகுதி, தேவர்கள் கண்விழித்து, துயிலெழும் நேரமாகக் கருதப்படுகிறது.

இந்த உன்னதமான அதிகாலை வேளையில் (சுமார் 4:30 AM முதல் 6:00 AM வரை) நாம் இறைவனைத் துதிக்கும்போது, தேவர்களின் அருளும் ஆசிகளும் எளிதில் கிடைக்கின்றன என்பது ஐதீகம். எனவேதான், மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையிலேயே ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வழிபடுவது பின்பற்றப்படுகிறது.

**பக்தி இலக்கியத்தின் பொற்காலம்**

மார்கழியின் பக்திச் சிறப்பிற்கு மேலும் பெருமை சேர்ப்பது, இரண்டு மகத்தான பக்தி இலக்கியங்கள் தான்: திருவெம்பாவை: சைவ மரபில், மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை பாடல்கள், கன்னிப் பெண்கள் சிவபெருமானை மணம் முடிக்க வேண்டி மேற்கொண்ட பாவை நோன்பைப் பற்றிப் பேசுகின்றன. திருப்பாவை: வைணவத்தில், பூமி பிராட்டியின் அம்சமான ஆண்டாள் நாச்சியார் அருளிய முப்பது பாசுரங்கள் கொண்ட திருப்பாவை, ஸ்ரீ கிருஷ்ணரைத் தம் மணாளனாக அடைய வேண்டி, ஆயர்பாடிக் கோபியர் மேற்கொண்ட விரதத்தைக் குறிக்கிறது.

**பார்வதி தேவியை ஏற்ற நாள்:**

ஒரு புராணக் கதையின்படி, மார்கழி மாதத் திருவாதிரை நாளில்தான் அன்னை பார்வதி தேவி, சிவபெருமானால் சகதர்ம சாரிணியாக (இடப்பாகத்தை அடைந்தவளாக) ஏற்றுக் கொள்ளப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. இதனால், பெண்களுக்கு வேண்டிய நல்ல வரங்கள், கணவன்-மனைவி ஒற்றுமை ஆகியவற்றை வேண்டி, இந்த நாளில் விரதம் மேற்கொள்வது மிகவும் முக்கியமாகும்.

பக்தியோடு இறைவனைத் தொழுவதற்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ள இறைவனின் வடிவமாகிய இந்த மாதத்திலே யாவரும் நோன்பு இருந்து, பக்தி மார்க்கத்தை கடைபிடித்து, கோதைத் நாச்சியாரும், மாணிக்கவாசகரும் அருளிய பாடல்கள் அறிந்து பாடி, பூமிக்கு பாரமில்லாமல் இருப்போமாக!



"அடிப்படை தர்மங்கள்"

வித்வான்
விரூபாக்ஷ சர்மா

## மார்கசீர்ஷத்தில் செய்யவேண்டியது

விடியற்காலத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். ஸூர்யோதயத்திற்கு முன்பே ஜகன்னாதனையர்ச்சிக்க வேண்டும்.
பிறகு விடியற் காலத்தில் அர்க்யத்தை கொடுத்து, காயத்ரியையும் ஜபித்து, உபஸ்தானத்தைச் செய்ய வேண்டும்.



ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்

## ப்ரம்ஹயக்ஞம்

ப்ரம்ஹயக்ஞம் செய்ய வேண்டியவர்
கவனமுடையவனாய் நியமமுடையவனாய், காயத்ரீ முதலான அனுஷ்டானங்களை அவசியம் செய்ய வேண்டும் . சென்று சுத்தனாய், சுத்தமான ஸ்தலத்தில் அத்யயனம் (ப்ரம்ஹயக்ஞம்) செய்ய வேண்டும்.

## யோகவாசிஷ்ட கதைகள்

வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி

சித்த தேவனே, ஸ்திர புருஷனே, சங்கல்பனே அங்கு வந்து வீற்றிருந்தார்போல ஆடாது அசையாது அமர்ந்திருந்தான் ஆகாசஜன். தோற்றாலும் தன் முயற்சியைக் கை விடுவதாய் இல்லை கால தேவன். எம தர்மராஜனிடம் சென்றான் அவன். நடந்ததனைத்தையும் இருந்து கேட்டு விட்டு, யமன் சொல்வான்: அப்பா, இவனே சங்கல்ப புருஷன். இவனுக்கு அழிவு கிடையாது. தேவ தேவர்களும், இறைவர்களும் இறைவிகளும், கோள்களும் நட்சத்திரங்களும் அனைத்துமே லயத்தில் அடங்குகிற பிரளய காலத்திலும்கூட, யாராலும் ஏதொன்றும் செய்வதற்கில்லாதவனாய், சுயம்பிரகாசமாய், தனித்திருப்பான், தன் ஒளியில் அனைத்தையும் நிறைத்திருப்பான் ஆகாசஜன்," .ஆகாசஜன் தன்னொளியில் அனைத்தையும் நிறைத்து நின்றான்.

முற்றும்

## சுபாஷிதம்

"यथा बीजं, विना क्षेत्रं,
उप्तं भवति निर्बलम् ।
तथा पुरुषकारेण विना दैवं न सिध्यति ॥
क्षेत्रं पुरुषकारस्तु दैवं बीजमुदाहृतम् ।

மனிதனின் முயற்சி வயலாகும். விதி விதையாகும். வயலின்றி விதை முளைக்க இயலாது. அது போன்று விதியும். (இப்பிறவியில் மனிதன் செய்கிற) முயற்சியால் தான் நிறைவுறுகிறது.

# வேதப்பயிர் செய்து வேதவாழ்வினைக் கடைப்பிடித்தோம் வேதங்கள் பாடுவாள் காணீர்.

நமது சந்ததியினர் வேதங்களைக் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித்தருவோம்







இறையருளாலும் , குருஅனுக்ரஹத்தாலும் , ஆஸ்தீக அன்பர்களின் முயற்சியாலும் கட்டுமானபணி இனிதே நடைபெற்றுவருகிறது



பாடசாலையில் கிருத்திகா மண்டல பாராயணம் லோகக்ஷேமார்த்தம் இனிதே நடைபெற்று வருகிறது .



